செ.கு:- 416 நாள்:- 19.11.12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 19.11.2012

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அத்தாணி கிராமத்தைச் சேர்ந்த திரு. நடராஜன் என்பவரின் மகன் சரவணன் 13.11.2012 அன்று மண்ணச்சநல்லூர் கிராமம் அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, துறையூரிலிருந்து திருச்சிராப்பள்ளி சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து மோதியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், பள்ளபட்டி கிராமம், திருச்சிராப்பள்ளி – மதுரை தேசிய நெடுஞ்சாலையில், ரூத் நகர் அருகே 16.11.2012 அன்று நின்று கொண்டிருந்த லாரி மீது அரசுப் பேருந்து மோதியதில், தருமபுரி மாவட்டம், திப்பிரெட்டி கிராமத்தைச் சேர்ந்த பேருந்து நடத்துனர் முருகேசன் மற்றும் பேருந்தில் பயணம் செய்த சிவகங்கை மாவட்டம், S.கோவில்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சின்னையா ஆகிய இரண்டு பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், குன்றத்தூரைச் சேர்ந்த திரு. செல்லம் என்பவரின் மகன் நவீன் சுதாகர் 16.11.2012 அன்று ஆலந்தூர் வட்டம், செயின்ட் தாமஸ் மவுண்ட் அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, மாநகர அரசுப் பேருந்து மோதியதில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் கிராமம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் ஒருவரும், மதுரை மாவட்டம், திருச்சிராப்பள்ளி - மதுரை தேசிய நெடுஞ்சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் நான்கு நபர்களும் காயமடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், மாவட்ட நிருவாகங்களுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், இவர்கள் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த சரவணன், முருகேசன், சின்னையா மற்றும் நவீன் சுதாகர் ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு 10,000/-ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9